தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: **6-3-2017**

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் நிறுவிய ஏ.பி.ஜே. அப்துல்கலாம் போஸ்ட் முனைவர் உதவித்தொகை (பிடிஎஃப்)

தமிழ்நாடு அரசு முனைவர்.ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்களை அங்கீகரிக்கும் வகையில் அறிவியலில் சிறந்த மற்றும் மாணவர்களின் நலன்புரிதலுக்காக போஸ்ட் முனைவர் உதவித்தொகை (பிடிஎஃப்), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள முதுநிலைப் பட்டப்படிப்பிற்கான பள்ளி மூலம் புதுமையான ஆராய்ச்சி முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் **(2002-2007)** என்ற பெயிரில் நிலைநாட்டி விவசாயம் / தோட்டக்கலை / பொறியியல் துறையில் தொடங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு சமூகத்தின் நன்மைக்காக புதிய அறிவு ஊக்கம் மற்றும் நிதி ஆதரவு வழங்க திட்டமிட்டு இதனை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ஓர் விஞ்ஞானிக்கு அளிப்பதாக முடிவு செய்யப்பட்டு இதனை **2017** முதல் அமுல் படுத்தப்பட்டுள்ளது. இந்த மதிப்புமிக்க விருதுனை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள பயிர் நோயியல் துறையைச் சார்ந்த முனைவர். எஸ்.இராஜமாணிக்கம் அவர்களுக்கு இந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ளது. இவருடைய ஆராய்ச்சி புதுமையை பரிசீலித்து ஆராய்ச்சி திட்டம் மிளகாயில் வைரஸ் நோய் மேலாண்மையை ஊக்குவிக்கும் ரைஸ்ஸோபேக்டீரியா மூலம் கட்டுப்படுத்தும் முறையினை ஆராயச்சி மூலம் கண்டறிய இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பட்டப்படிப்பு பயிலக முதன்மையர் முனைவர் ச. ராபின் அவர்கள் இந்த ஆராயச்சி திட்டத்தை விரிவாக எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர். கு. இராமசாமி அவர்கள் இந்த விருதினை முனைவர். எஸ்.இராஜமாணிக்கம், அவர்களுக்கு **1-3-2017** அன்று வழங்கினார். இதனை வழங்கும் பொழுது முனைவர். சு. நக்கீரன், ஆராய்ச்சிக்கான வழிகாட்டி மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பயிர் பாதுகாப்பு மைய முதன்மையர் முனைவர் க. இராமராசு மற்றும் நோயியல் துறைத் தலைவா் முனைவர். ஏ.எஸ்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் உடன் இருந்தனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்